**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

## O.S. No.386/2023

17.03.2025

**P.W.1- அர்ச்சுணன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். மழைக்காலத்தில் மட்டுமே விவசாய வேலை இருக்கும் என்றால் சரிதான். பிரதிவாதிகள் பக்கத்து ஊர்க்காரர்கள் என்ற வகையில் பழக்கம். பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து ரூ.500 கட்டுகளாக கடன் வாங்கினார்கள். மேற்படி கடனை பிரதிவாதிகளுக்கு அளிக்க நான் எனது வங்கி கணக்கிலிருந்து எடுத்து கொடுக்கவில்லை, எனக்கு தெரிந்த நண்பர் மூலம் ரூ.3 வட்டிக்கு வாங்கி பிரதிவாதிகளுக்கு கொடுத்தேன். நான் பிரதிவாதிகளுக்கு ரூ.1.75 வட்டிக்கு கொடுத்தேன். நான் ரூ.3 வட்டிக்கு வாங்கி ரூ.1.75 வட்டிக்கு பிரதிவாதிக்கு கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி லட்சுமணனுக்கு கடன் வாங்கிய தொகையை திரும்ப கொடுப்பதற்கு வருமானம் இருக்கிறதா என்றால் செக்யூரிட்டி வேலைக்கு செல்வதால் திருப்பி கொடுப்பார். 1ம் பிரதிவாதி ஊர் முழுவதும் பணம் வாங்கி சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருவதால், அவர் பணத்தை திரும்ப கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என ஊருக்கே தெரியும் என்றால் எனக்கு தெரியாது. எந்த தேதியில் பணம் கேட்டார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. 3ம் நபரிடம் பணம் கொடுத்த விவரத்தை எனது வழக்குரையிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்தின் 1-3 பங்குக்கு தான் பணம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். சொத்தின் வில்லங்கம் பார்த்து தான் கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். வில்லங்க ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்குரிய மூல பத்திரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அறிவுரையின் படி தான் எனது வழக்கறிஞர் பிராது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் 10ம் வகுப்பு

வரை படித்துள்ளேன். பிராது ஆங்கிலத்தில் உள்ளது. அதன் தமிழாக்கத்தை எனது வழக்கறிஞர் என்னிடம் சொன்னார். பிராதில் ரூ.13,60,000 என



கண்டுள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிராதில் ரூ.13,60,000 என பரிகாரம் கேட்டுள்ளதால் என்னுடைய வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பார்த்த பிறகு தான் நான் கடன் கொடுத்தேன். தாவா சொத்திற்கு மேற்கேயுள்ள நடைபாதை பொதுநடைபாதை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தில் மேற்கு மால் ஜெயராணி வீடு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14.02.2012ம் தேதிய ஆவண எண்.281-2012ன் படி 2ம் பிரதிவாதி, தனக்கு பாத்தியமான தாவா சொத்தை பொருத்து ஈஸ்வரி என்பவர் பெயருக்கு தன்னுடைய மைனர் மகன்களை கட்டுப்படுத்தி காப்பாளராக இருந்து கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரம் 05.02.2014ம் தேதி ஆவண எண்.138-2014 ஆவணத்தின் படி ஈஸ்வரி என்பவர் தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து 2ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து. எதற்காக 1ம் பிரதிவாதியிடம் கையெழுத்து வாங்கினேன் என்றால் இரண்டு பேரும் சேர்ந்து கையெழுத்து செய்தால் செல்லுபடியாகும் என்பதால் கையெழுத்து வாங்கினேன். வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தில் உரிமையாளர் 2ம் பிரதிவாதி என்பதற்கான சொத்து வரி ரசீது உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்பதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பத்திர செலவை பிரதிவாதிகள் தான் ஏற்றுக்கொண்டார்கள். மேற்படி தொகை ஈடுகடன் பத்திரத்தில் சேர்ந்துவிட்டது என்றால் சேர்க்கவில்லை. பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது, அது 29.02.2016ம் தேதி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி லட்சுமணனையும் இந்த வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டும் என்றால் சரியல்ல. ஈடுகடன் ஆவணத்தில் கண்ட தொகையை விட அதிக தொகை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை ஏமாற்றி ஒத்தி ஆவணம் என்று சொல்லி அழைத்து ஈடுகடன் பத்திரம் எழுதினேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்த பிறகு எந்தெந்த தேதிகளில் வட்டி செலுத்தப்பட்டது என வழக்கறிஞர் அறிவிப்பு



அனுப்பினார்கள், அதை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு ரூ.1,50,000 என வா.சா.ஆ.1ல் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஈடுகடன் தொகை ரூ.1,36,000 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை ஈடுகடன் வாங்குவதற்கு பதிலாக கிரையமே வாங்கியிருக்கலாம் என்றால் என்னிடம் இருக்கின்ற பணத்தை கொடுத்து ஈடுகடன் எழுதினேன். பத்திரம் என் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். ஈடுகடன் பத்திரத்தில் உள்ள வாசகங்கள் பிரதிவாதிகள் சொல்லி எழுதப்பட்டது என்றால் சரிதான். பத்திர அலுவலகத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு
செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால்
சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால்
கையொப்பம் இடப்பட்டது.

ஓம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.